செ.கு.எண்:- 228.                                                    நாள்:- 23.06.12

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 23.6.2012

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், முக்காணி கிராமம், தூத்துக்குடி – திருச்செந்தூர் பிரதான சாலையில் 19.6.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது அரசுப் பேருந்து மோதியதில் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்த, திரு. அந்தோணி ஜஸ்டர் என்பவரின் மனைவி திருமதி பால இசக்கி படுகாயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்தில் அகால மரணமடைந்த பால இசக்கியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவத்தில் காலமான திருமதி பால இசக்கியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9